ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2239/37 - 2021 අගෝස්තු මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.08.05

2239/37 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: BER/4/5/2/82.

காணி அமைச்சின் இல.: 4/3/11/2019/H/25.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை, 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 748 – பொல கொடுவ கிராம அலுவலர் பிரிவில் நல்லஹேன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தின் க. 4834 எனும் வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ள 0.0230 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப் பட்ட காணித் துண்டுகள்:

**01. துண்டு இல. 01; காணியின் பெயர்: இலேபெருமச்சியேவத்த அல்லது இலேபெருமச்சியா வத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: பஸ்துன்கோரலே ஆரச்சிகே கான்சனமாலா தேவி முனசிங்க; விஸ்தீரணம்: 0.0230 ஹெக்டயார்.**

வடக்கு: டீ. சுரந்த உம் ஏனையோரும் உரிமை கோரும் இலேபெருமச்சியேவத்த அல்லது இலே பெருமச்சியாவத்த; கிழக்கு: மு. பி. க 1071 இல் காணித் துண்டு இலக்கம் 01 (பாதை (பி. ச)) உம் காணித் துண்டு இலக்கம் 02 (மாவட்ட வைத்திய சாலை, பேருவளை); தெற்கு: மு. பி. க 1071 இல் காணித் துண்டு இலக்கம் 02 (மாவட்ட வைத்திய சாலை, பேருவளை); மேற்கு: டீ. சுரந்த உம் ஏனையோரும் உரிமை கோரும் இலேபெருமச்சியே வத்த அல்லது இலே பெருமச்சியாவத்த;

1A - G 34777 — 11 (2021/08)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பேருவளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

எம். ரன்ஜன் பீ. பெரேரா,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலகம்,
பேருவளை,
2021, யூலை 19.

08 - 230